முருகப்பெருமான் துணை

**மகான் கடுவெளிச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

15.05.2023, திங்கட்கிழமை

1. தருமபலமிக்க ஞானியாக
 தரணியில் பசிபிணி விரட்ட
 ஆறுமுகனார் அவதாரமாக வந்த
 அண்ணலே உன் பெருமைகூறி
2. கூறியே சோபகிருது விடைதிங்கள்
 குறைவிலா முதல்திகதி சோமவாரம்
 (சோபகிருது வருடம் வைகாசி மாதம் முதல் நாள், 15.05.2023, திங்கட்கிழமை)
 அறிவுரை ஆசிதனை இனிதே
 அரங்கமகா ஞானியர் கேட்க
3. கேட்கவே கடுவெளிச்சித்தர் யானும்
 குவலயம் பாதுகாப்புற உரைப்பேன்
 தட்டாது ஞானியர் காட்டுகின்ற
 தரும வழிகளை ஏற்றுவர
4. வருகவே உலகம் எங்கிலும்
 வள்ளலின் தருமம் பெருகி
 தருமவான்களாக மக்கள்படை
 தன்னார்வத் தொண்டில் நிறைந்து
5. நிறைந்து சுயநலம் தவிர்த்து
 நிம்மதி ஞானம் தருகின்ற
 மறைபோற்றும் பொது நலமான
 மகத்துவம் கொண்ட சேவைவழிகளை
6. வழிகளை உலகோர் ஏற்று
 வணங்கிச் செய்து வர
 அழிவைத்தரா இயற்கையும்
 ஆற்றலாக இறங்கி நின்று
7. நின்றுமே பாதுகாப்பு அமைதி
 நிலவுலகம் பேரிடர் காணா
 நன்றான மழைவளம் முப்போகமென
 நல்விளைச்சல் பசுமை குன்றா

8. பசுமை குன்றா பூமியாகவே
பாதுகாப்புடன் எல்லா வளமும்
வசமாகி உலகே சிறக்கும்
வள்ளலாக மக்களெல்லாம் மாறி

9. மாறியே அரங்கன் ஆசிபட
மாதருமவான்களாக மகான்களாக
மாறியே கலியுக மக்கள்
மாண்புகளை அடைந்து உயர்வர்

10. உயர்வுடன் உண்மை பலமும்
உலகையே மாற்றும் வெல்லும்
தயவைத் தரும் ஞானியரின்
தருமமே உலகை மீட்கும்

11. மீட்டு ஞான உலகமாக்கும்
முருகப்பெருமான் தலைமைவர
வாட்டமின்றி ஞானஆட்சி காணும்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–